DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| C.C.NO. 423 / 2022 | | Crime No.: | Station : |
|---|---|---|---|
| PW : 1 | LW : 1 | C.M.P. | DVC : |

| Name | ஈஸ்வரி | Caste | |
|---|---|---|---|
| Spouse Name | நஞ்சப்பன் | Calling | விவசாயம் |
| Village | செண்பகப்புதூர் | Religion | |
| Taluk | | Age | 63 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 10.12.2024 |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது செண்பகப்புதூரில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். எதிரி லோகநாதன் எனது பக்கத்து பூமியைச் சேர்ந்தவர். 2 வருடங்களுக்கு முன்பு 3ம் தேதி, 6வது மாதம் காலையில் பவானிசாகர் டேமிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் வரும்போது நாங்கள் பூமியை உழவு ஓட்டுவதற்காக நானும், எனது கணவரும் காலை சுமார் 11 மணிக்கு எங்கள் வயலுக்கு சென்றோம். பின்பு டிரேக்டர் வைத்து உழவு ஓட்டிக்கொண்டிருந்தோம். அப்போது பக்கத்து வயலில் இருந்த லோகநாதன் டிரேக்டரை ஓட்டக் கூடாது என்று நிறுத்தச் சொன்னார். பின்பு டிரேக்டரை ஓட்டுநர் நிறுத்திவிட்டார். நாங்கள் டிரேக்டர் டிரைவரை வண்டியை ஓட்டச் சொன்னோம்.

2. லோகநாதன் அப்போது எங்களிடம் இந்த பூமி என்னுடையது, அப்போது நீங்கள் எப்படி ஓட்டலாம் என்னுடைய பூமியை ஓட்டுவதற்கு நீ இங்க வரியா என்று சொல்லி தகாத வார்த்தையால் பேசி வேகமாக வந்து என்னைக் கீழே தள்ளிவிட்டார். பின்பு நான் மயக்கமாகிவிட்டேன். பின்பு நான் சத்தி அரசு மருத்தவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு 1 நாள் சிகிச்சையிலிருந்துவிட்டு பின்பு நரசிம்மன் டாக்டர் ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டேன். நரசிம்மா டாக்டர் ஆஸ்பத்திரியில் நான் சிகிச்சையிலிருந்தபோது போலீசார் வந்து விசாரித்து புகார் வாக்குமூலம் எழுதிக்கொண்டார்கள்.

என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 3, 4 முறை, மருத்துவமனையிலிருக்கும்போது தினமும் வந்து விசாரித்தார்கள். ஒவ்வொரு முறையும் நான் சொன்னதை போலீசார் எழுதிக்கொண்டு கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஆமாம். ஜெயப்பிரகாஷ் என்பவர் எவ்வளவு வருடங்களாக தெரியும் என்றால் 4 வருடங்களாகத் தெரியும், வேலை இருக்கும்போது தோட்டத்திற்கு அழைத்தால் வருவார். நாங்கள் வெளியில் செல்லும்போதும், நல்லது கெட்டத்திற்கு செல்லும்போது ஜெயப்பிரகாஷ் எங்களுடன் வருவரா என்றால் வருவார்.

2. லோகநாதனின் பூர்வீக சொத்தைத்தான் நாங்கள் விலைக்கு வாங்கியிருந்தோம் என்றால் ஆமாம் லோகநாதனின் தாத்தா சொத்து. நாங்கள் சொத்தை விலைக்கு வாங்கிய பிறகு எங்களது சொத்தை நாங்கள் மற்ற பங்குதாரர்களுடன் பாகப்பிரிவினை செய்துகொண்டோமா என்றால் இல்லை. நாங்கள் சொத்தை வாங்கியதிலிருந்து பங்கை நாங்கள் மாற்றி அனுபவித்து வருவதாக மற்ற பங்குதாரர்களுடன் எனக்கு பிரச்சனை இருந்து வந்தது என்றால் விலைக்கு வாங்கி 26 வருடங்கள் ஆகிவிட்டது அப்போது பிரச்சனை இல்லை, 2 வருடங்களுக்கு முன்பிலிருந்துதான் பிரச்சனை. தற்போது நீதிமன்றத்தில் கூறியதுபோல்தான் போலீசார் என்னை விசாரிக்கும்போதும் கூறினேனா என்றால் ஆமாம்.

3. எங்களது இடத்தில் வந்து பிரச்சனை செய்ததாக லோகநாதன் மற்றும் மற்ற பங்குதாரர்கள் மீது சிவில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எங்களுக்குள் உள்ள சொத்தைப் பிரசனையை குற்ற வழக்காக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுத்து வழக்குப் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் புகாரில் சொல்லப்பட்ட விபரங்களுக்கு மாறாக முரண்பட்டு நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் டிரேக்டரை யார்

ஓட்டி வந்தார்கள் என்ற விபரத்தை போலீசாரிடமும், புகாரிலும் சொன்னேனா என்றால் இல்லை. உண்மையாகவே அப்படிபொரு சம்பவம் நடைபெற்றிருந்தால் டிரேக்டரை ஓட்டி வந்த நபரின் பெயரைப் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியிருப்பேன் என்றாலும், அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்பதால்தான் டிரேக்டர் ஓட்டியதாக சொல்லப்படும் நபர் குறித்த விபரத்தை என்னால் சொல்லப்படவில்லை என்றாலும் அது கற்பனையான நபர் என்றாலும் சரியல்ல.

4. எனது மகன் எவ்வளவு வருடமாக சென்னையில் இருந்து வருகிறார் என்றால் எனது மகன் சரவணன் 15 வருடங்களாக சென்னையில் வசித்து வருகிறார். எதிரி லோகநாதன் என்னைக் கீழே தள்ளிவிட்டதாக தற்போது வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் தோட்டத்தில் வேலை செய்யும், எங்களுக்கு பழக்கப்பட்ட ஜெயப்பிரகாஷ் ஆகியோரும் சேர்ந்து எதிரியின் மீது பொய்யான வழக்கு பதிவு செய்து பொய் வாதம் புரிந்து வருகிறோம் என்றால் சரியல்ல. பாகம் பிரிக்கப்படாத சொத்தின் வளமான பகுதியை நாங்கள் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் எதிரியின் மீது இந்த வழக்கைப் பதிவு செய்துள்ளோம் என்றாலும், நான் நடந்ததாக சொல்லும் வழக்கு சம்பவம் எதுவும் உண்மையாகவே நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல,

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| C.C.NO. 423 / 2022 | | Crime No.: | Station : |
|---|---|---|---|
| PW : 2 | LW : 2 | C.M.P. | DVC : |

| Name | நஞ்சப்பன் | Caste | |
|---|---|---|---|
| Fathers Name | பழனியப்ப கவுண்டா | Calling | Rural Department -E.O.ஓய்வு |
| Village | செண்பகப்புதூர் | Religion | |
| Taluk | | Age | 88 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 10.12.2024 |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது செண்பகப்புதூரில் வசித்துக்கொண்டு வயோதிகம் காரணமாக வேலை எதுவும் செய்து வரவில்லை. அ.சா.1 எனது மனைவி. ஆஜர் எதிரி லோகநாதனைத் தெரியும். அவர் உள்ளூரைச் சேர்ந்தவர். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு பூமியை ஓட்டுவதற்காக சுமார் காலை 11 மணிக்கு வேலை செய்யும் ஆட்கள் வேலை செய்வதற்காக எங்கள் பூமிக்குப் போனார்கள். எதிரி வேலை செய்யும் ஆட்களை வேலை செய்யக் கூடாது என்று தடுத்ததாக எனது மனைவி ஈஸ்வரியிடம் தெரிவித்தால், ஈஸ்வரி எங்கள் பூமிக்குச் சென்றார். எனது மனைவி அதுகுறித்து லோகநாதனிடம் கேட்டதற்கு எனது மனைவியை எதிரி குச்சியால் வலது கை மணிக்கட்டில் அடித்துவிட்டார். பின்பு சத்தி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். அதன்பின்பு கோட்டுவீராம்பாளையத்திலுள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து

விசாரித்தார்கள் என்றால் 10 நாட்கள். போலீசார் என்னை விசாரிக்கும்போது தற்போது நீதிமன்றத்தில் கூறியதுபோல்தான் போலீசாரிடமும் கூறினேனா என்றால் ஆமாம். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நாங்கள் லோகநாதனின் பூமியை அபகரிக்கும் எண்ணத்தில் எனது மனைவி கொடுத்த பொய்யான புகாரிற்காக அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.